**செ.வெ.எண்: 532** **நாள்: 23.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**வடகிழக்கு பருவமழையின்போது மேற்கொள்ளவேண்டிய**
**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து**
**அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழையின்போது மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.09.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் துவங்கி டிசம்பர் மாதம் வரை பெய்யக்கூடும். வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்றையதினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையின்போது பாதிப்பு ஏற்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்களில் தங்க வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மீட்புப் பணி முகாம்களில் போதிய மருத்துவ முகாம்களுடன் கூடிய பரிசோதனை மேற்கொள்ளவும், பாதுகாப்பு வசதி, கூடுதல் கழிவறை வசதி மற்றும் இதர வசதிகளை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வட்டாட்சியர்கள் தங்களது பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இதர தகவல்கள் குறித்து தினமும் காலை 7 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பேரிடர் மேலாண்மை பிரிவில் இயங்கும் 1077 மற்றும் 04322 222207 என்ற அவசரக் கட்டுப்பாட்டு மைய தொலைபேசியில் தெரிவிக்கவும், மேற்படி விபரங்களை deocpdkt@gmail.com என்ற மின்னஞ்சல்

முகவரியில் அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் தங்களது பகுதிகளில் உள்ள குளங்கள், ஊரணிகளில் ஏதேனும் உடைப்பு இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்து, தேவையான அளவு மணல் மூட்டைகள் சாக்குப்பைகளை இருப்பில் வைத்து நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதனை அடைக்க தயார்நிலையில் இருக்கவும், பொதுப்பணித்துறையினர் அனைத்து புயல் பாதுகாப்பு இல்லங்கள், பொதுக்கட்டடங்கள், பள்ளிகள் மற்றும் சமுதாயக் கூடங்களில் பொதுமக்களை தங்க வைப்பதற்கு கட்டடங்களில் தேவையான மின்வசதி, குடிநீர்வசதி மற்றும் மின்னாக்கிகளை தயார்நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சுகாதாரத்துறையினர் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தேவையான மருந்து மாத்திரைகள் கையிருப்பில் வைத்திருப்பதை உறுதி செய்வதுடன், முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தவும், மின்சார வாரியம் சார்பில் மின் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும், சாலையில் விழும் மரங்களை நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் வடகிழக்கு பருவமழையின்போது பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சிறப்பாக மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) கருணாகரன், வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா, தண்டாயுதபாணி, சொர்ணராஜ், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சத்தியமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**